ARYA DHARMAM
TAMIL WEEKLY.
REGD. No. M. 2913

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.	வியாழந்தோறும் வெளியாகும்	விளம்பர விகிதம்.
[தபால் செலவுள்பட]	ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.	ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை ரூ. 20
ஜீவிய சந்தா ... ரூ 50	स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।	அரைப்பக்கம் ஒரு தடவை ரூ. 12
ஒரு வருஷ சந்தா ... ரூ. 3	गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥	ஒருபத்தி ஒரு தடவை ரூ. 8
ஆறுமாத சந்தா ... ரூ. 1½		இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை அணா 8
தனிப்பிரதி ஓரணா		நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்		

பு-25 | கும்பகோணம் பிரமாதி-வரு பங்குனி-மீ 1உ 1940 வரு மார்ச்சுமீ 14உ | லல-11

வாரக்குறிப்பு

(ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா)

வங்க ஸபை அமளி !! காங்கிரஸில் தான் வங்கம் கலஹம் விளைவித்ததெனில் அச்சட்ட சபையிலும் மந்திரி ரிகார்டை விட்டெறிந்ததன் மூலம் ஓர் சண்டை தோன்றிற்று ! நல்ல வேளையாக அது ஓர் வகையாக முடிந்து ஸபை நடக்கிறது.

இது யார் விஷமம் !! மதுரை மீனாக்ஷி கோயில் [illegible] பின் அது நன்கு நடப்பதாகக் காட்ட பகீரத ப்ரயத்தனம் நடந்தது. ஆசைக்காட்டி அழைத்து வரப்பட்ட குருக்கள் மாண்டார். அவர் ஸஹோதரர் ஓர் கோண வழக்கு தொடுத்திருக்கிறார். ஆலயப்பிரவேச அதர்மம் நன்கு நடைபெற அவர் பலி கொடுக்கப்பட்டதாக வழக்கு. ஆவலுடன் முடிவை பார்ப்போம்.

ஊமையா ? உளர்வாயனா ? காந்திஜி காங்கிரஸை எவ்வளவு பலப்படுத்தினாரோ அதைவிட இருமடங்கு துர்பலமாக்கி விட்டார். அளவுகடந்து மஹம்மதியருக்கு சலுகைக் காட்டி இந்து முஸ்லீம் இருவர் ஆதரவையுமிழந்தார். தார்மிகருக்குத் தனிக் கக்ஷி பலமில்லாத குறைவால் யாரிடம் சேர்வதென சர்ச்சை.

போகிறார் வருகிறார் ?? சென்னை பழைய கவர்னர் சிறிது நீடிக்கப்பட்டு உத்யோக காலத்தை கழித்து விட்டு ஊர் சென்றார். கூடிய வரை ராஜ்ய தந்தரத்துடனே நடந்தாரிவர். வருபவரும் இவர் வழியைப் பின் பற்றுவதாயின் முதலில் ஆலயப்ரவேச சட்டத்தை ரத்து செய்யவேண்டும்! பொறுத்தும் பார்ப்போம்.

பாம்பேயில் பூரி ஸ்வாமிகள்!! தார்மிகர்களை ஒன்று சேர்த்துப் புதிய இந்திய அரசிலமைப்பில் மத விஷயத்தை மதாபிமானிகள் சங்கத்திற்கே விட்டுவிட வேண்டும் என ஓர் தீர்மானம் செய்து ஓர் கார்ய கமிட்டியையும் அதற்கென அமைத்திருக்கிறார். ஆனலிவர் அ. இ. வர்ணாச்ரம ஸபையுடன் சேர்ந்து தலைமை வகித்து இதை நடத்தினால் சாலவும் நன்றென வேண்டுகிறோம்.

நானறிந்த மட்டில் புராண கதையல்ல !! சேதா, முரளீ என இரு கதைகள் படக்காக்ஷியில் தோன்றி உள்ளது பாரத கதை போலும் பின்னது பாகவதம் போலும் எழுதப்பட்டு தீண்டாமை ப்ரசாரம் செய்யப்படுகிறது. பலர் கடித மூல மிது எந்த புராணத்திலிருக்கிறதென நமக்கு எழுதுகின்றனர். இதுவரை யாம் பார்த்த எந்த 16 புராணங்களிலும் 5உபபுராணங்களிலுமிவை காணவில்லை.

ஆலயப்பிரவேசம் பற்றி கொச்சி திவான்

கொச்சி திவான் ஸர். ஷண்முகஞ் செட்டியார், தாழ்ந்த வகுப்பார் படித்த உபசார பத்திரத்திற்கு பதில் கூறுகையில் கொச்சியில் ஆலயப்பிரவேசச் சட்டம் செய்வது ஸாத்யமில்லையென்றும், மஹாராஜாவின் மத கொள்கையையும், நீண்டகால வழக்கத்தையும் மாற்றுவது எளிதல்லவென்றும், அந்த ஸம்ஸ்தானத்தில், தாழ்ந்த ஜாதியாருக்குத் தனிக்கோவில்கள் இருந்துவருவதாயும் அவைகளைக் கொண்டே அவர்கள் முன்னேற்றமடையக் கூடுமென்றும், ஸவர்ணிகள் போகும் கோவில்களைவிட இந்தக் கோவில் தாழ்ந்தவையென்று நினைக்கக் கூடாதென்றும், இந்தக் கோவில்களிலும் தெய்வஸான்னித்யமிருப்பதாயும் ஸமாதானம் கூறினார்.

ஸ்ரீ ஜயபிரகாச நாராயணன் கைது செய்யப் பட்டார்

பிரபல அபேத வாதியும், அபேதவாதக் கக்ஷியின் கார்யதர்சியுமான ஸ்ரீமான் ஜயபிரகாச நாராயனன் பாட்னாவில் பேசிய பேச்சுக் காரணமாக யுத்தகாலத்திய தேசப்பாது காப்புச் சட்டத்தின்படி கைது செய்யப் பட்டிருக்கிறார்.

மிருகபலியைத்தடுக்க சட்டம் செய்யமுடியாது. சென்னை கவர்னரின் புத்தி மதி

சென்னை கவனராயிருந்த லார்டு எர்ஸ்கின் மார்ச்சுமீ 4உ யன்று சென்னை ஜீவகாருண்ய பிரசார ஸபையில் தலைமை வகித்துப்பேசியபோது தேவாலயாதிகளில் மிருகபலியைத் தடை செய்யச்சட்டம் செய்யும் விஷயமாக கவர்ன்மெண்டின் அபிப்பிராயத்தை பின் வருமாறு கூறினான்:—

"தேவதைகளுக்கு மிருகங்களை பலியிடும் விஷயத்தில் இந்த ஸங்கமானது கொண்டிருக்கும் நோக்கத்தையும் அந்த வழக்கத்தைச் சட்ட மூலமாகத் தடுத்து விடவேணுமென்று இந்த ஸங்கத்தாருக்கு இருக்கும் ஆசையையும் பாராட்டவேண்டியது தான். ஆனால் புராதனமாக இருந்து வழக்கங்களை ஒழிப்பதற்குச் சட்ட மூலம் பிரயத்னப்பட்டால் பலவிதகஷ்டங்கள் எற்படுகின்றன. அது அனுபவத்தில் தெரிந்த விஷயம்,

ஆகவே இந்தசீர்திருத்தம் எவ்வளவு அவச்யமாயிருந்த போதிலும் கூட அதற்குச் சட்டத்தை உபயோகப் படுத்துவதற்கு ஸமயம் வரவில்லை."

குழந்தைகளின் ஆரோக்யம்.

பரிசுத்தமான உணவுதான் ஆரோக்யத்தை கொடுக்கவல்லது. குழந்தைகளுக்கு, அஜீர்ணம், கட்டி, மாந்தம், முதலிய எல்லாவித நோய்களும், புட்டிகளில், நாள்பட வைக்கப்பட்டிருக்கும் சேர்க்கையான உணவை ஊட்டுவதே. சிறு குழந்தைகளுக்கு, தாய்பால் குறைந்திடின் பயஸ்யா என்னும் கைகண்ட ரஸாயனத்தை, தாய்மார்கள் அருந்தவேண்டும். பயஸ்யா தாயின்பாலை மிகுதியாக வளர்க்கிறது. புஷ்டியாகவும் செய்கிறது.

கிடைக்குமிடம்:—

ATREYA AYURVEDIC WORKS,
Thennore Road, Trichinopoly.

திறமைவாய்ந்த எவ்வித நவீன பல் வயித்தியத்திற்கும், டாக்டர் கோஷியே,

பற்பொடிகளில் சிறந்தது கிருஸ்லீட் பற்பொடி ஒன்றே.

கிருஸ் லீட்பல் ஆஸ்பத்ரி, ரெயில்வேஸ்டேஷன் எதிரில், கும்பகோணம்.

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க பிரசாரம்.

இராமேச்வரம்

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவில் 26—2—40 மாலை 7மணிக்கு அம்பாள் சந்நிதானம் கீழரத வீதியில் வெள்ளிரத கொட்டகையின் முன்பாக விசேஷப் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது அதுசமயம் ஆத்தங்குடி ஸ்ரீமான் ஜகதீச அய்யரவர்கள் விஜயம் செய்திருந்தார்கள். அம்மகாசபைக்கு சாஸ்திரப் பாடசாலை உபாத்தியாயர் கே. என். சுப்ரமண்ய சாஸ்திரிகள் அக்ராஸனர் பதவியை ஏற்றுக்கொண்டு தனது முன்னுரையில்.

கீதையா— காந்தீயமா— என்ற விஷயத்தைப்பற்றி சுமார் 1—மணிநேரம் உபன்யசித்தார்கள். அவ்வுபன்யாசத்தின் சுருக்கம் ஸ்ரீமான் காந்தியும் அவரது சீடர்களும் சொல்லும் சொற்களோ செய்யும் செய்கைகளோ ஒன்றும் யுக்திக்கோ அனுபவத்திற்கோ, முற்றிலும் முரண்பட்டன வென்பது வெட்டவெளிச்சம். உலகினர் நகைக்கும்படி செய்ததை சமாளிக்க கீதையை சந்தியில் இழுக்கின்றார்கள் தீண்டாமை உண்டென்றதற்கு கீதையில் பிரமாணமில்லை தீண்டாதார் ஆலயப்ரவேசத்தை கீதை கண்டிக்கவில்லை என்பது போன்ற பல அபாஸவார்த்தையை கூசாமல் நடுமேடையில் கூறுவது மிகவும் அனுசிதமென்று உணரும் காலம் விரைவில் வந்தே தீரும்

கீதை என்பது ஸகல வேதசாஸ்திரங்களின் தத்வஸாரமாலை என்று சொல்வது பொருந்தும். குருமுகமாய் வேதசாஸ்திரங்களை முறைப்படிகற்றுக் கொண்டவர்களுக்கு குருவின் மூலம் நியமப்படி கற்றுக் கொண்ட கீதை விஷயஅட்டவணையாக இருந்து உபகரிக்கும். இவ்வளவு கம்பீரமான கீதையைப்பற்றி ஸம்ஸ்கிருத ஞானமே சிறிதுமில்லாத இவர்கள் பேசுவதில் எவ்வளவு அர்கதையுள்ளவர்களென்பதை நேயர்கள் ஆலோசிக்கவேண்டுமென்றும் கூறி வர்ணாச்ரமங்களும் ஸங்கரஜாதியும் உண்டென்பதற்கு அவரவர்களுக்கேற்றவாறு தர்மங்களும் அவரவர்கள் அவரவர் தர்மத்தையே தவராது நடத்திவரவேண்டுமென்றும் விரிவாகக்கூறி கீதையையும் கீதைக்கு மற்றுமுள்ள சாஸ்த்திரங்களுடன் இருக்கும் இணைவிடாததுடர்ப்பையும் பல உதாரணங்களுடன் விளக்கிக்கூறி கீதை பகவான் திருவாய்மலர்ந்தருளியதால் மிகச்சிறந்ததாகக் கருதப்படுகின்றது. கீதை மகாபாரதத்தில் உள்ளது. அம்மகாபாரதத்திலேயே— பகவானுடைய ஆக்ஞையான சுருதி ஸ்மிருதி விதிகளை மீறியவன் பகவானுக்கு துரோஹிஎன்று கீதையை அருளிய பகவானே கூறியிருப்பதில் நின்றும் எல்லா சாஸ்திரங்களும் பிரமாணமாக ஒப்புக்கொண்டேதீரவேண்டுமென்றும் இல்லையேல் கீதாசார்யனுக்குத் துரோகமிழைத்தவராவதோடு உண்மையான இந்துக்களாகக் கருதக்கூடியவர்களல்ல வென்றும் கண்டித்துப் பேசி கீதைக்கு முற்றிலும் விரோதமான இவர்கள் செய்கை காந்தியமே தவிரகீதை அல்லஎன்று நிரூபித்தார்கள்.

பிறகு ஸ்ரீமான்ஜகதீச அய்யரவர்கள் அரசியலும், சமூகமும், தற்காலநிலைமையையும், என்ற விஷயம் பற்றிபேசினார்கள். அதாவது காங்கிரஸ் ஆரம்பகாலத்தில் கையாண்டுவந்த உயர்ந்த தத்வங்களையும் தற்கால ஸ்ரீமான் காந்தியைத்தலைமையாய்க் கொண்டதின்பேரில் மதவிஷயத்தில் தலையிட்டு பலருக்கு மனதைப்புண்படுத்தி காங்கிரஸின் கௌரவத்தையே பாழாக்கிவிட்டார்கள். தர்மாபிமானிகள் சிறந்த ஒற்றுமையுடனிருந்து மிக ஊக்கத்துடன் தர்மத்தைப்பாதுகாக்கத்தீவிரமுயற்சி செய்யவேண்டுமென்றும் சுமார் இரண்டுமணி நேரம் மிக அருமையாகப் பேசினார்கள் பிறகு ஷை சங்கம் காரியதரிசி ஸ்ரீவெங்கட்டராம தீக்ஷிதரவர்களால் அக்ராஸனருக்கும் உபன்யாஸகருக்கும் சபையோர்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 10 மணிக்குக் கூட்டம் சனாதன தர்மத்திற்கு ஜே என்ற ஜயகோஷத்துடன் இனிது கலைந்தது. ஒ-ஸி

வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் மேல்மங்கலம்

ஷை சபையின் ஆதரவில் பிரமாதி-௵ மாசி-௴ 2௳ குருவாரம் சிவராத்திரி தினத்தில் சபை அத்யக்ஷர் ஸ்ரீ பிலாஞ்சேரி சுப்பிரமணிய அய்யரவர்கள் அக்ராசனத்தின் கீழ் ஸ்ரீ கோமடம் சங்கர கனபாடிகள் அவர்கள் இரவு 8-மணி முதல் 10-மணி வரை மஹாசிவராத்ரி மாஹாத்ம்யம்பற்றியும் 10-மணி முதல் 12-மணிவரை ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் அவர்கள் பஸ்மஜாபாலோபநிஷத்து தத்வம் பற்றியும் பிரவசனம் செய்தார்கள். காரியதரிசியால் வந்தனம் கூறப்பெற்று சபை இரவு 12½-மணிக்கு இனிது நிறைவெய்தியது. (ந-ஸி)

கோவிலூர் வர்ணாஸ்ரம தர்ம வாலிபர் சங்க ஸ்தாபனம்

இன்று இவ்வூர் வித்தியாசாலையில் எச். ஆர். இ. போர்டு எக்ஸிகூட்டிவ் ஆபீஸராகிய ஸ்ரீமான் ஆர். எஸ். கிருஷ்ணசாமி அய்யரின் தலைமையின்கீழ் ஷை சங்கத்தை நிர்மாணம் செய்வதற்கு ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கிராசனர், சங்கத்தின் அவசியத்தைப் பற்றியும், வருங்காலத்தில் வாலிபர்கள்தான் தர்மத்தைக் காப்பாற்றக் கூடியவர்களென்றும் குறிப்பிட்டார். பின்னர் இக் கமிட்டிக்குக் கீழ்கண்ட நிர்வாகஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர்.

தலைவர் ஸ்ரீ ஆர். விஸ்வநாதய்யர். காரியதரிசி ஸ்ரீ ஜி. ஜானகிராம் நிர்வாக மெம்பர்கள்:— ஸ்ரீ டி. எஸ். ராமஸ்வாமி ச்ரௌதிகள் ஸ்ரீ எஸ். வி. கோபாலன் ஸ்ரீ வி. ஆர். ராதாகிருஷ்ணன் ஸ்ரீஎஸ். வி. பாலசுப்ரமணியன் ஸ்ரீ கே. ஏ. ராமசாமி முதலியோர்கள்.

நிர்வாகஸ்தர்கள் தேர்தல் முடிந்தபின்கீழ் கண்டவர்கள் அரிய முறையில் மிக விளக்கமாகசொற்பொழிவாற்றினார்கள். ஸ்ரீமான்கள் ஆர். விஸ்வநாதய்யர் வி. ராமமூர்த்தி கே. ஏ. ராமசாமி வி. ஆர். ராதாகிருஷ்ணன் ஜி, ஜானகிராம்

பின்னர் சொற்பொழிவின் முடிவில் அடியில்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. இச்சங்கத்திற்கு "வர்ணாஸ்ரம தர்ம வாலிபர் சங்கம்" என்று பெயரிடப்பட்டது.

2. இச்சங்கம் இவ்வூர் வர்ணாஸ்ரம சுயராஜ்ய சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்கவேண்டும்.

3. சென்னை ஆலயப்பிரவேச உரிமை தொடராதொழிச் சட்டம், ஆகம சாஸ்திரங்களுக்கும், தர்மசாஸ்திரத்திற்கும் முற்றிலும் முரண்பாடாகவிருப்பதால் இதை ரத்து செய்யவேண்டுமென்று பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரை இச் சங்கம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறது.

கூட்டத்தின் இறுதியில் அக்கிராசனர் அரிய ஒரு பேருரை ஆற்றியபின் காரியதரிசி வந்தனோபசாரம் கூற இனிதே நடந்தது. [ஒ-ஸி]

ஸநாதன தர்ம மகா சபை ஆத்தன்குடி

பிரமாதி௵ மாசி-௴ 27௳ இச்சங்கத்தின் மாதக்கூட்டம் பிரம்மஸ்ரீ தமிழ்ப் பண்டிதர் ஜெ. ஸாமிநாதய்யரவர்கள் தலைமையில் கடவுள் வாழ்த்துக்குப்பின் ஆரம்பமானது. ஸ்ரீமான்கள்சு. வீ.ர.கதிரேசன்செட்டியார், ஜெ. பி. ஜெகதீசய்யர், வி. ஏ. கணேசகனபாடிகள்ஜோதிஷம்திருவெங்கிடமய்யங்கார், முறையே காங்கிரஸ் வாதியின் துடுக்கான பேச்சு இந்து மகாசபையும் காங்க்ரசும், வேதமஹிமை, அங்கத்தினர் கடமை, என்பதைப்பற்றி விரிவுரையாற்றினர். வந்தனோபசாரத்துடன் கூட்டம் நிறைவெய்தியது.

அடியிற்கண்டவர்கள் சங்கத்தின் புது வருஷத்து நிர்வாகஸ்தர்களாகத் தெரிந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள்.

பிரமஸ்ரீ உப. வே. திரு. முத்துஸாமி அய்யங்காரவர்கள் தலைவர். திரு. சு. வீர். கதிரேசன் செட்டியாராவர்கள் உபதலைவர் ஸ்ரீ ஜோஸ்யம் எம். திரு வேக்கிடமய்யங்காரவர்கள் காரியதரிசி. ஸ்ரீ எஸ். வெங்கட்டராமய்யர் அவர்கள் உபகாரியதரிசி ஸ்ரீ டி. பி ஜெகதீய்யர் அவர்கள் பிரசார காரியதரிசி ஸ்ரீ ஜோஸ்யம் திரு மணவாளய்யங்கார் அவர்கள் பொக்கிஷதார்.

மஹாசிவராத்திரியன்று இவ்வூர் ராமகுமசு வேத பாடசாலை கனபாடிகள் கணேச கனபாடிகளும் வித்தியார்த்களும் காலை 8-மணி முதல் இரவு 9-மணி வரை யஜுர் வேதம் ஸம்ஹிதா பாராயணம் ஏழு காண்டங்களும் சிரத்தையுடன் பாராயணம் செய்தது போற்றற்குரியது. எம். திருவேங்கட அய்யங்கார்.
காரியதரிசி.

ஓர் சந்தேகம்

சகோதரர்கள் மூவர்கள் பிரம்மசாரிகளாக ஒரே குடும்பத்தில் இருக்கலாகாதென கர்ணாகர்ணிகையாக சந்தேகம் வந்துளது. இது சாஸ்திரீயமா? இதன் விடையையும் 'ஆர்யதர்ம' மூலமாக எதிர்பார்க்கிறேன்.

ஓர் சந்தேகி

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்)

கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,
தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை

கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட்., கும்பகோணம்.

ஸ்ரீ ஜெகத்குரு ஸ்ரீசங்கராசாரியா ஸ்வாமிகள் விஜயம்

திப்பிராஜபுரம்

28-2-40வ புதன்கிழமை நமது ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் இவ்வூருக்கு மறுபடியும், பல பக்தர்களுடைய பிரார்த்தனைக் கிணங்கி விஜயம் செய்து, ஐந்து தினங்கள் தங்கி ஸ்ரீ சந்திரமௌளீஸ்வரருடைய திவ்ய பூஜாராதனமும், விசேஷபிருமண சந்தர்ப்பணையும் கடைசி நாள் ஞாயிற்றுகிழமை தினம் இரவில் விசேஷ பிருது, வாணம் முதலியவைகளுடன் வெகு குதூஹலமாய் கிரும ப்ரதக்ஷணமும் இனிது நடந்தேறியது.

28—2—40வ புதன்கிழமை மாலை 6½ மணிக்கு ஸ்ரீப்ரும்ம வித்யா ஸபாவில், நமது ஸ்ரீ. ஆசார்யாள் விபூதி மஹிமையைப் பற்றியும், ஷை விபூதிதாரண காலத்தில் சொல்லவேண்டிய "த்ரயம்பகம் யஜாமஹே" என்னும் வேத மந்திரத்தின் ஸாரத்தைப் பற்றியும் ஓர் திவ்ய உபன்யாஸம் செய்தார்கள். மனிதனை விருக்ஷத்துக்கு ஒப்பாகச் சொல்வதுண்டு. அந்த விருக்ஷத்துக்குப் பழம் தான் பரிணாம அவஸ்தை பழம் பழுத்தவுடன் தானாகவே விழுகிறது என்பது சகஜமாயிருந்தாலும் வெள்ளேரிக் கொடியில் ஒரு பழம் பழுத்து பக்குவமாகி விட்டால் கொடி அந்தப் பழத்தைத் தனியாக விட்டுத் தெரித்துக் கொண்டு மேலே படர்ந்து கொண்டு போய்விடும். அதே போல் ஸம்ஸார சக்ரத்தில் மூழ்கி கடு திக்ததி சுவைகளை அருந்தி, அனுபவித்து, கடைசியில் மாதுர்யமான பழமாகி ஞானவனுகி பக்குவப் பட்டவுடன் இந்த ஸம்ஸாரம் இவனை விட்டு விடும், இவன் ஸம்ஸாரத்தை விடவேண்டியதில்லை. இதற்காக நம்மைப் படைத்த ஸ்ரீ பரமேஸ்வரனை முக்கண்ணனை, நாம் தினம் தியானித்து இஹலோகத்தில் நிருடகாத்திரனுக இருக்கவும், பாரமார்த்திகத்தில் வெள்ளேரி பழத்தை பக்குவப் பட்டவுடன், எப்படி கொடி விட்டுவிடுகிறதோ அது போல் ஸம்ஸார பந்தம் அற்று, சுகியாகவும் ஆனந்தவானுகவும் இருக்க ஆதி முதற் பொருளாகிய மஹா விபூதியாகிய ஸ்ரீ பரமேச்வரனை ப்ரார்த்திக்கவேண்டும் என்று விஸ்தாரமாகவும் அழகாகவும் உபன்யசித்தார்கள்.

2—3—40வ சனிக்கிழமை தினம் வரகூர் ப்ரும்மஸ்ரீ சுப்பிறமணிய சாஸ்திரிகள் "ஆசாரிய மஹிமை" அவர்களுடைய திக்விஜயத்தின் நோக்கம், அதின் ஆவச்யகம், "அக்ஞானந்தர்கஹன பதிதான்" என்னும் ச்லோகத்தின் தாத்பர்யம், இதுகளைப் பற்றி வெகு சுருக்கமாகவும் அழகாகவும் சொன்னார். பிறகு ப்ரும்மஸ்ரீ நாட் நாராயண ராவ் அவர்கள், தீண்டாமை, ஆலய ப்ரவேசம் இதுகளைக் கண்டித்தும், விக்ரஹ ஆராதனத்தின் சூக்ஷ்மம், நமது ஸநாதன தர்மத்தின் விசாலமான தன்மை முதலிய தத்வ ஆராய்ச்சியைப் பற்றியும் நமது ஸ்ரீ ஆச்சார்யாளால் ஆங்காங்கு நியமிக்கப்பட்டுவரும் முத்திராதிகாரி நியமனமும், அதின் ரஹஸ்யமும் முதலியவைகளைப் பற்றி வெகுவாக தெளிவுபடுத்தவும் உருக்கமான சொற்பொழிவு செய்தார்.

3—2—40வ ஞாயிற்றுகிழமை தினம் ஸ்ரீ ஆசார்யாள் அநேகருடைய வேண்டுகோளுக்கிணங்கி, ஏராளமாகக் கூடியி-
-ல ஜனங்களுக்கும் லளிதமாகப்
- ஓர் அழகான உபன்யாஸம்
-ம் உடம்பிலுள்ள அழுக்
-னம் ஸ்நானம் செய்
நம்முடைய மனசில் உள்ள அழுக்கு, அதாவது "பாபம்" என்று சொல்வது, போவதற்கு ஸ்ரீபரமேச்வரனை தினந்தோரும் தியானம் செய்தால் கொஞ்சகொஞ்சமாக விலகும். தினம் படுப்பதற்கு முன் அன்றன்று நம்மால் செய்யப்பட்ட பாபச் செயல்களையோ நற்செயல்களையோ ஒருதரம் நாமே ஸ்மரித்து, நம்மை சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவரவர்கள் சக்தியானுஸாரம், தன்தன் ஜீவிய தசைக்குப் பிறகும் இதரர்களுக்குப் பிரயோஜனமாகும்படிக்கு உள்ள சிவாலய கைங்கர்யம், வாபீ, கூப, தாடக, ஆராமாதிகளின் நிர்மாண திட்டம் இதுகளில் ஈடுபடுதல்வேண்டும். அதனால் பாப மூட்டையை இனிமேலாவது அதிகமாக விருத்தி பண்ணிக் கொள்ளாததுடன், கொஞ்ச கொஞ்சமாக இலேசாக செய்து கொள்ளவும், அதேவ, கடைசியில் பந்தவிமுக்தனாகி மோக்ஷத்தையடைந்து வீடு பெற ஹேதுவாகும் என்றும் வெகு அழகாகச் சொன்னார்கள்.

சென்னை

ஓர் ஷஷ்டப் பூர்த்தி பிரும்மஸ்ரீ பக்த சிகாமணி ஸ்ரீ ராமச்சந்த்ர ஹரிஹியின் அறுபதாமாண்டு விழா மாம்பலம் ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் இரவு 8மணிக்கு 17—3—40 நடைபெறும். ஸ்ரீ வத்ஸ வெ. ஸோமதேவ சர்மா வடமொழியில் ஓர் அபிநந்தந பத்ரம் அளிப்பார். பக்தர்கள் அவருக்குத்தக்க ஸன்மானம் செய்வார்கள்.

ஓராண்டு விழா ஸ்ரீ கீதாச்ரவண பக்த ஸபையின் எட்டாமாண்டு விழா ராஜமான்ய ஸ்ரீ லலிதாப்ரஸத தண்டலம் ராமஸ்வாமி அய்யரவர்கள் (சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க கௌரவ கார்யதர்சி) தலைமையில் நடைபெறும். பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் ஸ்ரீ கீதாப்ராவம் என்பதை குறித்து உபன்யாஸிப்பார்.

வைத்தீஸ்வரன் கோயில் பிரபல உற்சவம்.

ஸ்ரீவள்ளிஅம்மைக்கு நவரத்ன கிரீடம்

(நமது விசேஷ நிருபர்)

குடந்தை, மா 6வ

திருப்புள்ளிருக்கும் வேளூர் என்னும் ஸ்ரீவைத்தீஸ்வரன் கோயில் க்ஷேத்திரத்தில். உற்சவம் சென்ற தை மீ 5வ முதல் ஆரம்பித்து நடந்து வருகிறது. ஸ்ரீவாலாம்பிகா ஸமேத ஸ்ரீவைத்திநாதஸ்வாமிக்கு வருகிற பங்குனிமீ 1வ முதல் பிரும்ம உற்சவமும் நடைபெறும். திருக்கைலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஷண்முகதேசிகஞான ஸம்பந்த பண்டாரசன்னதி ஸ்வாமிகளால் சிறப்பாக உற்சவம் ஏற்பாடாகி நடந்து கொண்டுமிருக்கிறது. ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானம் தருமபுரத்திலிருந்து வைத்தீஸ்வரன் கோயிலுக்கு எழுந்தருளி நேரில் உற்சவத்தை பக்தி சிரத்தையோடு குறைபாடின்றி செவ்வனே நடத்தி வருகிறார்கள். இவ்வாலயத்தில் இருபதாயிரம் ரூபாய் திட்டத்தில் மிகவும் பெரிய திருப்பணிகளை செய்வித்தும் வருகிறார்கள். ஸ்ரீசெல்வமுத்துக் குமரஸ்வாமிக்கும், ஸ்ரீ தெய்வயானைக்கும் கல்லிழைத்தகிரீடம் இருந்து வருகிறது. ஆனால் ஸ்ரீவள்ளியம்மைக்கு இல்லை. இதை ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானம் புதிய நூதனமானதோர் கல்லிழைத்த (நவரத்தின) கிரீடத்தை இப்பொழுது செய்வித்து ஸ்ரீ அம்பிகைக்கு சாத்தி பக்தர்கள் பரவசமாகி தரிசிக்கும்படி செய்வித்திருக்கிறார்கள். கிரீடத்தின் அழகிய தோற்றம் மனதைக்கவரும்படி இருக்கிறது. இப்பெரிய மகோற்சவங்களை ஸ்ரீமகாசன்னிதானம் நேரிலேயே விஜயம் செய்து நடத்துவது பெருமையை அதிகப்படுத்திவிட்டது. ஆகவே, மாகாணங்களின் பல பாகங்களினின்றும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஏராளமாய் விஜயம்செய்து தரிசித்து வருகிறார்கள்.

வால்மீகி வாக் விலாஸினீ சபா. புரஸவாக்கம்,

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாளனுக்ரஹத்தை முன்னிட்டு மூன்று வருஷகாலமாக ஷை சபா ஆதரவில் "வால்மீகிவாக்பூஷணம் தீக்ஷாமங்கலம் ப்ரும்ஹஸ்ரீ ராமனுததீக்ஷிதர் அவர்களால் வால்மீகி ராமாயணம், மகா பாரதம் முதலிய புராணங்கள் பிரவசநம் செய்யப்பட்டு வருகிறது.

மத்தியில் பக்த ஜனங்களுடைய வேண்டுகோள் பிரகாரம் ஆன்னாரவர்களால் மாக புராணம் ஆரம்பிக்கப்பட்டு மகாசிவராத்ரியன்று இனிதுமுடிவடைந்தது. தினந்தோறும் அநேக பக்தஜனங்கள் வந்து பிரவசநத்தை கேட்டு ஆனந்தமடைந்தார்களென்பது குறிப்பிடத்தக்கது.

மகாசிவராத்திரியன்று ஷை சபை பிரஸிடெண்ட் ஏ. எஸ். சிவகாமிநாத அய்யர், பி.ஏ., பி.எல்., அட்வகேட் அவர்கள் தீக்ஷிதர் அவர்களுடைய வாக்பாடவத்தை பாராட்டி மரியாதை முதலியதுகளைச் செ- தார். கடைசியில் தீக்ஷிதரவர்கள் சபையோ- களுக்கு நன்றி செலுத்தி இத் தர்மகை- யத்தில் உதவிசெய்த ஷை சபா கார்யத- எம். ஆர். ராமச்சந்திர சாஸ்திரிகளை பார- டினர். பிறகு சபை இனிது முடிவடை- தது.

ஒரு நிருபர்.

ஸ்ரீரங்கம் ஸனாதனிகளின் பிரம்மாண்டமான ஊர்வலம்

நேற்று 11—3—40 திங்கட் கிழமை முன்னறிவிப்புக் கிணங்க ஸ்ரீரங்கனாதன் ஸன்னிதியில் அநேக ஆயிரம் ஆஸ்திக ஆடவர் பெண்டிர்கள் புடை சூழ நிறைந்த ஜனத்திரளின் முன்னிலையில் ஆஸ்திக ஸ்திரிரத்னங்களால் ஏற்பாடு செய்யப்பட்டு தயாரித்து வைத்திருந்த திருப்பரி வட்டங்களினால் அலங்காரம் செய்யப்பட்ட அணியரங்களுக்கு ஸஹஸ்ர நாமார்ச்சனை வெகு நேர்த்தியாய் நடைபெற்றது. இதே மாதிரி ஸ்ரீரங்கநாச்சியார், ஸ்ரீராமானுஜர் முதலானவர்களுக்கும் நடைபெற்றபின் அசேஷ ஆஸ்திக மஹா ஜனங்கள் ஒருங்கே திரண்டு பிரம்மாண்டமான கூட்டமாக மாலை சுமார் 7 மணிக்கு ஸ்ரீ ஸஹஸ்ரநாம பாராயண ப்ரவசனம் செய்து கொண்டு தாயார் ஸன்னதியின் முன் நமது மாட்சிமை தங்கிய மன்னர் பிரானுக்கு ப்ரக்ருத மஹா யுத்தத்தில் பூரண ஜயம் கிடைக்க வேணு மென்றும் மதறாஸ் ஆலயப்ரவேச அனுமதி சட்டத்தைக் குறித்து நாடெங்கும் நடைபெற்று வரும் அனேக ஆஸ்திக சிரோமணிகளின் அஸ்ப்ருஷ்யர்கள் ஆலயப்ரவேச எதிர்ப்பைக் கண்ணுற்றுவது அரசாங்கத்தார் சிறிதும் தயங்காது மதறாஸ் ஆலயப்ரவேச அனுமதி சட்டத்தை தகர்த்தெறிய வேணுமென்றும் ப்ராத்தித்த பின் பகவத் ப்ரஸாதம் விநியோகிக்கப் பட்டு அம்மாபெருங் கூட்டம் இரவு சுமார் 10-20 மணிக்கு இனிது முடிவெய்தியது.

டி. ரெங்கராமானுஜன்

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியமருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

கம்பர் திருநாட்கொண்டாட்டம்

திருவல்லிக் கேணித் தமிழ்ச் சங்கக்காரியதரிசி ஸ்ரீ. ப. ரெ. திருமலை அய்யங்கார் எழுதுகிறார்:—

வடமொழியும் தென்மொழியும் நன்கு பயின்று செந்தமிழ்க் கவிச்சக்ரவர்த்தியாய்த் திகழ்ந்தவர் திருவழுந்தூர் வள்ளலாய கம்பநாட்டாழ்வார். வான்மீகியாரிடம் இவருக்குள்ள பக்தி அளவற்றது. இவர் இராமாயண கதையை தமிழ் விருத்தப் பாக்களிற் பரக்கப் பாடியுள்ளார். வடநூல் யாகரண முணர்ந்தவராகலின் இவர் து வழிநூலுக்கு இராமாவதாரம் எனப் யரிட்டுள்ளார். இராமாயணம் என்பது ன்மீகி முனிவர் பாடியதற்கே தனித்த காமம். கம்பருக்கு முன்னும் பின்னும் ர் போன்ற மஹாகவி இத் தமிழ் நாட் இல்லை என்பது ஒருதலை. தமது பெருங் ப்பியத்தில் பலதுறைகளமைத்துள்ளார். ற்பனைக்குக் கம்பன் என்பது நாடறிந்த ழமொழி. காளிதாசாதி கவிஞரும் கம்பர் யர்ந்து சிறந்து விளங்குவது இருநூற் கலையினைப் பயின்றால் நன்கு புலனாகும். இக்கவிச்சிரேட்டரின் திருநாள் (23-3-40 சனிக் கிழமை பங்குனி உத்திரத்தன்று வருகிறது. திருவல்லிக் கேணித்தமிழ் சங்கம் இவ்வருட விழாவை பத்து தினங்களிற் கொண்டாட உத்தேசித்துளது. பிரதி தினம் மாலை 6-30 மணி முதல் 8மணி வரை திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் பிரபல வித்துவான் களால் தக்க விஷயங்கள் உபந்யஸிக்கப் பெற்று உத்திரத்தன்று திருவிழா முற்றுப் பெறும்.

தமிழபிமானி அனைவரும் இக் கொண்டாட்டத்தை ஆங்காங்கு செவ்வனே நடத்தி தமிழ்த்தாயின் திருவருளைப் பெறுவாராக. வாழ்க ஆரியதர்மம்! வாழ்க சான்றோர் மொழிகள்! வாழ்க வையமெலாம்!

இப்பொழுதென் செய்வது?

ஊக்கமது கைவிடேல் விடாமுயற்சி நற் பயனளிக்கும். வினைத்தலை சாதிக்கலாம்.

மனச்சஞ்சலம் அகற்று. எக்கட்சியிற் சேர்ந்தாலும் சற்றும் பயனில்லை. சநாதனிகளனைவரும் அகில இந்திய வர்ணாச்ரம சங்கத்தினங் கத்தினராகி ஒத்துழைப்பதே வெற்றிக்கு அறிகுறி. ஆங்காங் குள்ள பல வேறு நாமதேயமுள்ள சபைகள் இதன் கிளைகளாக ஆகுதல் நனிநலம்.

பொதுக் காரியங்களில் உழைக்கவரும் தியாகிகள் அடக்கம், பொறுமை, கருமத்திற் கண் நோக்கு உடையவர்களாயிருத்தலத்தி யாவசியகம்.

பிளவுகளிருத்தலும் உண்டாதலும் சகஜம். அவற்றை நீக்க முயல்வதே உத்தமன் செய்கை, அவதூறுகளை அறவே வொழிக்க அல்லல் போம்

"ஆர்யதர்மம்,, நன்கு ஆதரிக்கப் பட்டாலல்லது ஒரு விதத்திலும் முன்னேற வழியில்லை.

ஆலயப் பிரவேச சட்டம் முதலிய அதர்ம சட்டங்கள் தொலைய் தகுந்த முஸ்திப்புகள் தேவை. கட்டாய ஹிந்தி வொழிந்த தெதனால்; கெஞ்சிக் கேட்டால் ஒன்றும் வராது.

ஒற்றுமையே நம் ஜயத்துக்கு மூல காரணம்.

ஆங்காங்கு ஸநாதநதர்ம வித்யாலயங்கள் நிறுவி நம் ஆரியமார்க்கம் சிறுவர் சிறுமிகளுக்குச் செவ்வனே போதிக்கப்படல் வேண்டும்.

ஸாத்விக தனவந்தர்களை அடுத்து வேண்டிய பண உதவிபெற்று திட்டங்களேற்படுத்தி ஊரூராய்த் தக்க பிரசாரம் செய்துகொண்டேயிருத்தல் நமக்கு நன்மை பல அளிக்கும்.

கிட்டாதாயின் வெட்டெனமற.

மடாதிபதிகள் மனம்வைத்தால் எல்லாம் இனிது நிறைவேறும்.

அன்பினால் உலகை ஆள்க.

ப. ரெ. தி.

வர்ணாச்ரம சங்கம் அரியக்குடி

பிரமாதிஸு மாசிமீ 19உக்கு (2—3—40) சனிக்கிழமை மாலை7மணிக்கு காரைக்குடி ஜில்லா வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தின் சார்பில், அரியக்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் சன்னதியின் முன்பாக அரியக்குடி ஸநாதனிகளின் மாபெரும் கூட்டம் ஒன்று நடைபெற்றது. சுமார் 300பேர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தனர். அனேக பெண்மணிகள் வந்திருந்தது போற்றத்தக்கது.

மதுரை ஸ்ரீமான் எம். செல்லையாபிள்ளை அவர்களாலும் காரைக்குடி சேவு மெ மெய்யப்பசெட்டியார் அவர்களாலும் தோத்திரம் பாடப்பெற்று மன்னார்குடி தர்க்க வித்வான் பிர்ம்மஸ்ரீ ராமபத்ராசாரியார் அக்ராசனம் வகித்தார் பிறகு மதுரை ஸ்ரீ செல்லையாபிள்ளை அவர்களும் அரியக்குடி ஸ்ரீமான் மெய்யப்பசெட்டியார் அவர்களும் "சங்கம் அவசியம்" என்பது பற்றி எடுத்துரைத்தார்கள்.

மதுரை அ.இ.வ. ஸ்வராஜ்ய சங்க தலைவர் பிர்ம்மஸ்ரீ என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் தற்காலம் நமது மதத்திற்குஏற்பட்டிருக்கும் இடையூறுகளை நிவர்த்தித்துக் கொள்ள சில மார்க்கங்களை அனுஷ்டிக்க சங்கம் அவசியம் என எடுத்துரைத்தார்.

அங்கு குழுமியிருந்தவர்கள் மெம்பர்களாகக் சேர்ந்தார்கள். உடன் சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றது. வந்தோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவு பெற்றது

ந.நி.

கும்பகோணம் தாலூகா தாசில்தாரின் சிறந்தபக்தி

(நமது விசேஷ நிருபர்)

கும்பகோணம், மார்-7உ

சென்ற மகஉற்சவத்தில் மகத்திருநாள் தீர்த்தவாரி தினமாகிய 23—2—40ல் மகாமகக்குளம் தீர்த்தவாரி துலாபார மண்டபம் அசுத்தமாய் இருந்ததை துலக்காமலிருப்பதை கண்டு பெரிதும் வருந்திய கும்பகோணம் தாசில்தார் ஸ்ரீமான் கோபால நம்பியார் ஓடோடியும் ஓர் துடைப்பம் எடுத்துவந்து மண்டபத்தை சுத்தம் செய்த பக்தி ததும்பிய பணிதான் என்னே! மகாஜனங்கள் இதுகண்டு பிரமித்தனர்!! பாராட்டினர்!! ஆச்சிரியமுற்று தாசில்தார் ஸ்ரீமான் கோபாலநம்பியாரை புகழ்ந்து ஆசி கூறினர்கள். பெரிய அதிகாரி ஒருவர் இவ்வாறு கைங்கரியம் செய்ய முற்பட்டது இப்பக்கத்தில் இதுவே முதல் தடவையாகும்.

விளம்பரம்.

வேதாந்தம் வாசிக்க இரண்டு வித்யார்த்திகள் தேவை. ஒவ்வொரு வித்யார்த்திக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. பதினைந்து கொடுக்கப்படும். திருச்சினாப்பள்ளி மேல சிந்தாமணியில் பிர்ம ஸ்ரீ தர்மக்ஞ போலகம் ஸுந்தரேச சாஸ்திரிகள் அவர்கள் பாடம் சொல்லுவார்கள். விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

போலகம் ஸுந்தரேச சாஸ்திரிகள்,
மாதலங்கொல்லைத் தெரு,
மேல சிந்தாமணி,
தெப்பக்குளச்சிரை
திருத்தனு அச்சுக்
கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road.
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.